

# தென்புலோலி
# ஸ்ரீமனோன்மணி அம்பிகை
(ஸ்ரீ முதலி அம்பாள்)

# திருப்பொன்னூஞ்சல்

உ

சிவமயம்



தென் புலோலி

# ஸ்ரீ மனோன்மணி அம்பிகை
(ஸ்ரீ முதலி அம்பாள்)

# திருப் பொன்னூஞ்சல்
(விருத்தங்கள்)

சுக்கில ௵ மாசி மாதம் 1990


கவிதாஹாரா ஆக்கம்:


கரவெட்டி யா/தேவரையாளிச் சைவ வித்தியாசாலை
(இந்துக்கல்லூரி) ஸ்தாபகர் சைவப்பெரியார்
உயர்திரு. கா. சூரன் அவர்களின் புத்திரி
சிவபாக்கியம் ஆசிரியை

## நினைவுக்கு...

இந்நூலின் வருமானம் முழுமையும் தென் புலோலி அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பிகை (ஸ்ரீ முதலி அம்பாள்) ஆலயத்தின் திருப் பணிக்கே உரியது என்பதை அடியார்கள் அறிந்து கொள்க.

- ஜாக.



தென்புலோலி
ஸ்ரீமனோன்மணி அம்பிகை
(ஸ்ரீ முதலி அம்பாள்)

''நீலரத்ன நிபாம்பத்ம யபாச்ச
வரதாபயாம் ததீம் சந்திர மகுடாம்
த்யாயேத் தேவி மனோன்மணி''

தற்புருஷ சிவாச்சாரியார்

**சிவஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்கள்**

அருளிச் செய்த

# ஆசிச்செய்தி

எண்ணிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது காண், என்றும் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றும், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்றெல்லாம் மானிடப் பிறவியைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள் தம் முன்னோர்கள், ஞானிகள்.

'வானவர் ஏத்தையான் வைகுந்த வாழ்வு பெற்றதும் ஞானநான்முகன் சத்திய உலகம் நண்ணியதும் ஏனை விண்ணவர்தம் வாழ்க்கை மேவியதும் ஆனுயர்த்தவன் அருச்சனைக் குரியதுன் பயனால் என்பது காஞ்சிபுராணம்,

ஆகவே உலகில் சகல சிறப்புக்களும் ஆலய வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்பதனை உள்ளத்தில் கொண்டு மானிடப் பிறப்பின் பெறுதற்கரிய பெரும்பேற்றினை புலோலியூர் சந்தாதோட்டம் மனோன்மணி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் பெற்றுள்ளனர் என்பதனை அக மகிழ்வுடன் பாராட்டுகிறேன்.

மேலும் இந்த மலரை வெளியிடம் பேரெண்ணம் கொண்ட திரு. ஆசையர் நடராஜா அவர்களுக்கும் புலோலியூர் சந்தாதோட்ட மக்களுக்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென துன்னாலை ஸ்ரீ ஞானவைரவர் சுவாமியை பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

சுபம்!

உ
சிவமயம்

புலோலி அருள்மிகு ஸ்ரீ முதலி அம்பாள்
என அழைக்கப்பெற்ற

# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
# வரலாறு

*முன்னுரை*

மதங்களிலே மூத்த மதம் இந்து மதம். முடிந்த முடிவைக் கொண்ட இந்த மதத்தின் தோற்றத்தை அதன் தத்துவார்த்தங்களைப் பற்றியெல்லாம் இன்றும் மெய்ஞ்ஞானிகளென்ன விஞ்ஞானிகளுமே ஆராய்ந்து வருகின்றனர். இந்து மதம் அறுசமயங்களை உள்ளடக்கியது. அவையனைத்தும் மனிதகுல ஈடேற்றத்துக்கு வகுக்கப்பட்ட மார்க்கங்களேயாம். இந்த அறுசமயங்களுள் ஒன்றுனதே 'சாக்தம்' எனும் சக்தி வழிபாட்டு முறையாகும்.

''எங்கெங்கு காணினும் சக்தியடா'' எனப் பக்திப் பரவசப் பெருக்கால் பாடுகிருன் பாரதி. சக்தியே அனைத்துப் பொருட்களின் தோற்றத்துக்கும், ஆக்கத்துக்கும், அழிவுக்கும் ஏதுவாகும் என்பர் ஆன்றோர். சக்தியின்றி எதுவும் இயங்காது என்பது விஞ்ஞானத்தின் தெளிவாகும். எனவே தான் சக்தியை மக்கள் தாயாக, தெய்வமாகப் பூசித்துப் போற்றி வணங்கி வருகின்றனர்.

ஒன்ருய் பலவாய் பராவிப் பரந்திருக்கும் மஹாசக்தியை ஒன்பது கூறுக்கி 'நவசக்தி' என ஆன்றோர் அழைத்து வந்தனர். இந்த நவசக்திகளுள் ஒன்றுனதே மனோன்மணி தெய்வமாகும்.

*வரலாறு*

ஈழத்தேயத்தே வடபால் அமைந்துள்ளது பருத்திநகர். உழவர் ஏர் ஒலியுடன் புலவர் ஒலியும் குழைந்து ஒலிக்கும்

பெருமைசால் புலோலியூர் ஆண்டுண்டு. அதன் தென்திசையில் அமைந்த குக்கிராமந்தான் சந்தாதோட்டம். சந்தாதோட்டத்தின்கண் ஏறத்தாழ மூன்று தலைமுறைகட்கு மேலாக மனோன்மணி அம்பாள் அங்கே குடிகொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகிறாள். இது அமமவர்களின் பூர்வ புண்ணியமேயாகும்.

மூத்தகுடி எனப் பெருமை கொள்ளும் தமிழ்குழாம் தம் முன்னைச் சரித்திரத்தை ஏட்டில் எழுதி வைக்கவில்லை என்ற பழிக்கு ஆளாய் உள்ளது. இதற்குப் புலோலிவாழ் மக்கள் விதிவிலக்கல்ல. 'முதலி அம்பாள்' என ஊர்வாழ் பக்தர்களால் பூசிக்கப்பெற்று வரும் மனோன்மணி மாதாவின் பூர்வீக சரித்திரம் ஏட்டில் இல்லாதது எமது துர்ப்பாக்கியமேயாம்.

1658-ம் ஆண்டு பறங்கியர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினர். இக்காலத்தே சிங்கைநகர் அகத்தே புலோலி சந்தாதோட்டப் பகுதியில் ஓர் தடாகம் இருந்ததாயும், யானைகளுடன் வந்த பாகர் யானைகளை அந் நீர்நிலையில் தாகசாந்திக்கு விட்டதாயும், அதில் ஒன்று புதைவுற்று வெளியேற முடியாது திணற, யானைப்பாகன் செய்வதறியாது அண்டையிருந்த ஆலவிருட்சத்தின் கீழ் வீழ்ந்து வணங்கிப் பயனடைந்து யானையை மீட்டுச் சென்றதாயும், கர்ண பரம்பரைக் கதையொன்று நிலவுகிறது. ''ஆனைப்பாகன் தோட்டம்'' என காரண இடுகுறிப் பெயர் பெற்ற அவ்விடத்தே ஒரு நாள் அதிகாலை பனம்பழம் பொறுக்க வந்த 'முதலிச்சி' எனும் பெண்ணினல்லாள் முன் ஓர் பேரொளி தோன்றிப் பின் அது பெண்ணுருப் பெற்ற ஓர் திருக்காட்சியை கண்ணுற்றதாயும் ஆங்கு உருப்பெற்று எழுந்ததே 'முதலிச்சி அம்பாள்' எனும் இத்திருத்தலமாகும்.

ஆரம்பத்தில் ஓலைக்குடிசைக்குள் அம்பாள் உருவம் பொறிக்கப்பட்ட கல் ஒன்று நாட்டப்பட்டுப் பக்தி சிரத்தையுடன் பூசிக்கப்பட்டு வந்தது. 1949-ம் ஆண்டளவில் அண்ணவியார் என அன்புடன் அழைக்கப்படும் முருகர் கந்தையாவின் அயரா முயற்சியால் குடில் கற்கோயிலாற்று. கிழக்கு வாயில் கொண்ட இவ்வாலயத்தின் வடக்கு வீதியில் பாரிய

ஒதி விருட்சத்தின் கீழ் வைரவர் திருக்குடில் அமைந்திருந் தது. இன்னல் போக்கி இஷ்டசித்தி பெற்றுய்ய பக்தர்கள் விசேட நேர்த்திகள் வைத்து வைரவரை வலம் வந்து வண ங்கி வருவராயினர்.

## திருப்பணிகள்

திருவருள் கூடப்பெற்று, ஊர்மக்கள் இதயம் பொங்க கோவில் கட்டடமும் பெரிதாகியது. மூலஸ்தானம், அர்த்த மண்டம், கற்பக்கிரகம், ஸ்நபன மண்டபனம், தரிசன மண் டபம் உருப்பெற்றன. கருவறையின் கிரீடமென விளங்கும் பண்டிகை (தூபி) அதன்பால் அமைந்த மூசிகவாகன விநாய கர், ஆவினள் சக்தி, வள்ளி தெய்வானை சமேத மயிலேறும் முருகன் ஆதியாம் தெய்வங்களின் சிறபச் சித்திர வேலைப் பாடுகள் கைதேர்ந்த வெளியூர்ச் சிற்பிகளால் பல்லோரும் வியந்து போற்றும் வண்ணம் கட்டி ஒப்பேற்றப்பட்டன. சிற்பங்களுடனுன தூபி வேலைகளுக்கான செலவை வயிரவி யும் மனைவி சின்னுச்சிப்பிள்ளையும் பிள்ளைகளும் பொறுப் பேற்றனர். கருங்கல்லாலான மூலவிக்கிரகம், செம்பினல் வடிக்கப்பட்ட எழுந்தருளி வேலைப்பாடமைந்த பாரிய குத்து விளக்கு இவையாவுமே இக்காலத்தே சமைக்கப்பட்டவையே யாம். இவை அனைத்துமே பொதுமக்களின் பொருளுதவி கொண்டு ஈடேற்றப்பட்டாலும் பெருமளவில் பணஉதவி புரிந்தவர்கள் திருவாளர்கள் வயிரவி மாணிக்கம், கணபதி செல்லையா அவர்களேயாம்.

கோயில் அடிகோல இடமளித்து உயில் எழுதி உபய மளித்த பெருமக்கள் வயிரவி, க. வல்லிபுரம் இருவரும் தம் மக்கள் முறையே வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை இருவ ரையும் இச் சாசன மூலம் பூசையுரித்தாளராய் நியமித்து தேகவியோகமெய்தினர். கோயில் நிர்வாகம் ஸ்தம்பிதம் ஏற்படுங்கால் இவ்விருவருக்கும் அதை இயக்கும் தத்துவம் இவர்கள் பாலானது என அறியக்கிடக்கிறது. சிம்ம வாக னத்தாள் வீதி உலாவர ஒரு சிங்கவாகனத்தை விருப்போடு

செய்வித்து உபயமளித்துதவிய காலஞ்சென்ற ஆழ்வார் வேலுப்பிள்ளை எனும் பெரியார். இவரே புராண பாராயணத்தை இவ்வாலயத்தில் ஆரம்பித்து ஆயுள்பரியந்தம் சிறப்புற ஆற்றிவந்த பெருமானுருமாவார். ஆலயத்திற்கு அஸ்வ (குதிரை) வாகனம் தேவையென திருவுளங்கொண்ட கந்தர் ஆழ்வாத்தை என்பார் பெண்களிடம் பணந்திரட்டி அழகுறச் செய்வித்து அளித்தார்: பக்தர்கள், அடியார்கள் தங்கி, இளைப்பாறி ஏகுவதற்கென தன் மனைவி பொன்னம்மாவின் ஞாபகார்த்தமாக வடக்கு வீதியெல்லையில் கணபதி பொன்னர் ஓர் மடங்கட்டி உதவியவை, பெருங் கைங்கரியமாகும். நேர்த்தியாய் இம் மடத்தில் அன்னதானம் நடைபெறுவது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். இன்றுள்ள ஆலயக் கெண்டா மணியை உபயமளித்தவர் அன்பர் திரு. முருகர் சின்னத்தம்பியாவார்.

தரிசன மண்டபத்திற்கு பாரிய கேடர்களைத் தருவித்து தூண் எழுப்பி கோப்பிச வேலைகளையும் பூர்த்தியாக்கப் பேராதரவு தந்தவர்கள் திருவாளர் வ. மாணிக்கம் வ. வேலுப்பிள்ளை அடங்கிய 10ம் உபயகாரர்கள். இம் மண்டபத்திற்கு கொங்கிறீற் இட்டு நிலமாக்கும் பணி திருவாளர்கள் மு. நமசிவாயம், வ. கணபதிப்பிள்ளை, வ. பொன்னையா சி. சிற்றம்பலம் போன்றோரைக் கொண்ட 8ம் உபயத்தினரும், தரிசன மண்டபத்திற்கு ஓடு போடும் பணியைத் தாங்கியவர்கள் முன்னைநாள் 9ம் உபயகாரர்களாம் திரு. க. வேலுப்பிள்ளை, வி. வேலுப்பிள்ளை, வ. செல்லையா, ஆ. பிள்ளைநாயகரும் ஏனையோருமாம். ஆலயத்தில் பொருத்தப்பட்டுள்ள கல்லாலான நிலைகள் நான்கும் அதற்கான கதவுகளையும் திருவாளர்கள் வே. செல்லத்துரை, வ. கணபதிப்பிள்ளை, சி. மாணிக்கம், க. சின்னப்புவும் உபயமளித்தார்ாள். திரு. ஆ. முத்து என்பவர் 3ம் 4ம் மண்டபத்துக்கு ஓடு போட்டு உதவினுர். கோமயக் கல்லை நா. கணபதியார் செய்வித்து பதிப்பிக்க, ஆசனக்கல்லை திரு. மு. கந்தர் அன்பளித்தார்.

1980இல் கோவில் பாலஸ்தானம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. இக காலத்தேதான் பிள்

ளையார் முருகன், வைரவர் இவர்களிற்கு தனித்தனிப் பரி வாரங்கள் அமைக்கப்பெற்றன. பாலமுருகன் சிலையை வி. வேலுப்பிள்ளையும், வைரவர் விக்கிரகத்தைக் க. கணேசுவும் வழங்கப் பிரதிஷ்டை செய்துவைத்தனர். மணிக்கூட்டுக் கோபுர வேலையை ஆ வேலுப்பிள்ளை உட்பட முதலாம் உபய காரரும் நாவற்குழி மாணிக்கமும் மேற்கொண்டனர். திரு மஞ்சனக் கிணறு திரு. பொ. இரத்தினம் சிரமதானப் பணி யாய்த் தொடக்க திரு. பொ. மகேஸ்வரன் பொழி கல் லாற் கட்டுவித்து ஒப்பேற்றினர். கருவறைத் திருத்த வேலை களை பொ. இரத்தினம் உட்பட 7ம் உபயகாரர் கையேற்று பளிங்குக் கல்லு பதிப்பித்து ஒப்பேற்றினர். எழுந்தருளிக்கு எவர்சில்வர் திருவாசியை உபயமளித்தவர் திருமதி சின் னையா சரோஜா. வைரவர் உட்பரிவாரத்துக்கு பளிங்குக் கல் பதிப்பிக்கும் பணியை பா. சந்திரன் நிறைவேற்றித் தந்தார். தீர்த்தோற்சவத்துக்குரிய பஞ்சலோகத்தாலான அஸ்திரதேவரை க. வேலுப்பிள்ளை ஈந்தளிக்க, சோட சோப சாரமாம் கும்பதீபங்கள், கொடி, குடை ஆலவட்டம் ஆதி யனவற்றை திரு. சு. கிருஷ்ணபிள்ளை அன்பளிப்புச் செய் தார். இவ்வாறுய். தேவியின் திருத்தலத்தை சிறப்புறக் கட்டியெழுப்பியும் தாபரித்தும் வந்த பெருமக்களை – எம் முன்னேடிகளை யாம் என்றென்றும் ஞாபகத்திருத்தி நன் றிப் பெருக்காற்றுவது நம் தலையாய கடனாகும்.

## அன்னையை ஆராதித்தவர்கள்

தெய்வத்துக்கு அடுத்தபடியாக துதி செலுத்தப்பட வேண்டியவர்கள் குருமார்கள். ஆரம்பத்தில் குலாசார முறைப்படி கோவிலுக்குப் பூசை வைத்து வணக்கதலமாக் கியவர்கள் க. இளையவியர், வ. கணபதிப்பிள்ளை, வ. வேலுப் பிள்ளை, அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோவில் பொறுப் பாளர் சிவகுரு ஆகியோர். இவ்வாலயம் சைவாகம விதி முறையைக் கடைப்பிடிக்க மாற்றம் பெற்றபோதிருந்து சோ. பொன்னுத்துரைக் குருக்கள், அண்ணுசாமி ஐயர், இரவிச்சந்திரசர்மா, பிரேமச்சந்திரக் குருக்கள் ஆகியோர் நித்திய நைமித்திய பூசைகள் ஆற்றி வழி நடத்தி வந்துள்

ளனர். இன்றுள்ள ஆலய விருத்திக்கும் சிறப்புக்கும் பெரும் பங்காற்றியவர் தேவஸ்தான பிரதமகுருவாகிய பிரம்மஸ்ரீ பிரேமச்சந்திரக் குருக்கள் என்பது பொதுமக்கள் அபிப்பிராய மாகும்.

## ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம்

புலோலி ஊரில் தெய்வீக அருள் பரப்ப கருணைகொண்டு விளங்கும் அன்னை மனோன்மணி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் அக்ஷய வருடம் தைத்திங்கள் 27ந் நாள் (9-2-1987) தெய்வத் திருவருளால் நிகழ்த்தப்பட்ட மகா கும்பாபிஷேகம் வித்தியாசாகர நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. பிரதம குருக்களாய் பிரம்மஸ்ரீ இ. குமாரசாமிக் குருக்களும், தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்கள் மற்றும் உதவி குருமாரைக் கொண்ட குழுவினால் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவெய்தியது.

## திருவூஞ்சல் பா அமைந்த கதை

கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது குமாரசாமிக் குருக்கள் ''எல்லாம் திருவருளால் சிறப்பாய் அமைந்து வருகிறது. அம்பாளுக்கு திருவூஞ்சல் பா இல்லாதது ஒரு பெருங்குறை'' என்று வருந்தினர். சற்றும் எதிர்பாராதவிதமாய் அம்பாளின் கும்பாபிஷேக ஆராதனைகளைக் கண்டுகளித்துய்ய ஆலயத்துக்கு வருகைதந்திருந்த வதிரி செல்வி சிவா சூரன் அவர்கள் காதிற்படவே, அவர் அம்பாள் சந்நிதானத்திலிருந்தே ஒரு சில மணி நேரத்தில் திருவூஞ்சல் பாமாலை பாங்குற ஆக்கி ஈந்தார். இதுவும் மனோன்மணி மாதாவின் திருவருள் அற்புதமேயாம். அத் திருவூஞ்சல் பா இங்கே பிரசுரிக்கப் பெற்றுள்ளது. அன்பர்கள், அடியார்கள் பக்தி சிரத்தையுடன் ஓதி உணர்ந்து, நோய் நொடி துன்பம் தீர்ந்து திருவருட் சிறப்பும் பெற்று, சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று உய்யவேண்டும் என்ற பேரவாவின

ளுய், இச் சிறு மலரை அடியனின் காணிக்கையாக அம்பாளின் திருவடிக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## அற்புதங்கள் — புதுமைகள்

அற்புதங்கள் புதுமைகள் புழுகல்ல. அவையென்றும் புதியனவேயாம். ஊனினை உருக்கி உள்வொளி பரப்ப பக்தி அவசியமாகின்றது. பக்தியைத் தட்டியெழுப்ப அற்புதங்கள் ஓர் ஏதுவாய் உள்ளது. ஆகவே மனோன்மணி ஆச்சியின் ஆச்சரியத்தகு அற்புதங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது சால ஒக்கும் எனக் கருதுகின்றேன்.

பழித்துரைத்த அன்பர் ஒருவருக்கு பெருவலி கண்டது. பரிகாரம் பரிகரிப்பு எல்லாம் பயனற்றுப் போகவே வைரவர் குடிலை நிழற்றி நின்ற ஒதி விருட்சக் குழை குணமாக்கியதைப் பலர் அறிவார்கள்.

ஊமைக் குழந்தையைப் பேசவைத்த இத் தெய்வத்தை இன்றும் போற்றிப் பூசிப்பதோடு அவர்கள் ஆலய உபயப் பங்காளிகளாகவும் சேர்ந்துள்ளனர்.

மகா சிவராத்திரி அனுட்டிக்க கொழும்பிலிருந்து வந்த அரசாங்க உத்தியோகத்தர் மாமிசத்தை தவறுதலாகப் புசித்துவிட்டதால், கோவிலுக்குச் செல்லாதிருக்க வயிற்றுக் குத்து ஏற்பட்டது, ஆங்கிலம் தமிழ் வைத்தியங்கள் குணமாக்காது போகவே அம்பாளின் அடிப்பொடி ஆற்றி ஆறுதல் அளித்தது.

இருதயத்தில் துவாரம் கண்ட நோயாளிக்கு யாழ் பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் ''ஓரிரு தினங்களில் உயிர் பிரிந்துவிடும். துண்டை வெட்டிப்போய், இஷ்டப்பட்டதை உண்ணக் கொடுங்கள்'' என்று கைவிட்டதும், வீடு செல்லாது அந் நோயாளி முதலில் அம்பாளின் வாசலிலே தஞ்சமாகி அம்பாளின் பிரசாதங்களே உட்கொண்டு குணமாகி, மணமாகி குழந்தை குட்டிகளுடன் இன்னும் வாழ்கிறார்.

மாற்றமுடியாதென்ற புது வியாதி ஒன்றால் பிடிக்கப்பட்ட அன்பர் ஒருவருக்கு மார்பகத்துக் கடியில் பாரிய ஒப்

பரேஷன் செய்தும் குணமாகாது போகவே ஆச்சிக்கு நேர்த்தி வைத்துப் பூசித்து வந்ததன் பயனால் குணமாகி இன்று குறைபாடு எதுவுமின்றி அரசாங்க இலாகாவில் கடமை யாற்றுகிறார்.

செங்கமாரி வந்ததோடு கால் கை முடக்கி நடக்கமுடியாத நோயாளி அம்பாளிடம் தஞ்சம் புக, 2, 3 கிழமைகளில் மருந்தேதுமின்றி அவரைக் குணமாக்கி சிங்கவாகனத்தைக் காவிச் சுமக்கவைத்த சக்தியை இங்கு அறியாதார் இல்லையெனலாம்.

சோதியா நின்றார்க்கு எளிதில் அருள் சுரக்கும் எம் அன்னையின் அற்புதங்கள் புதுமையன்றோ?

*நிறைவுரை*

யானறிந்தளவில் யாக்கப் பெற்ற இக்கைநூல் முழுமையானதன்று. அம்பாளின் இன்னபிற தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றையெல்லாம் வெளிக்கொணர்ந்து பிரசுரித்து திருக்கோயிற் சரித்திரத்தை தொடர்ந்து எழுதவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

*நன்றியுரை*

எனது முயற்சி கைகூடவைத்த இறையருளுக்கு முதற்கண் நன்றித் துதி செலுத்துகிறேன். தலத்தைப்பற்றிய தகவல்களைத் தந்துதவிய அன்பர்கள், நண்பர்களுக்கும் நன்றி நவில்கின்றேன். மனோன்மணி அம்பாளின் உருவ நிழற் படம் தந்துதவிய அச்சு நகர் ஓவியர் திரு. ஆ. இராசையாவுக்கும், இக்கைநூலை அழகுற அச்சிட்டு குறுகிய காலத்துள் வெளிவர கைகொடுத்துதவிய அல்வாய் அபிராம் அச்சகத் திரு. தி. ஸ்ரீதரனுக்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மீது உரிய காலத்தில் திருப்பொன்னூஞ்சல், திருப்பஞ்சகம் ஆகிய பாடல்களை ஆக்கி உதவிய வதிரி வாழ் செல்வி: கவிக்குயில் – சிவா – சூரன் ஆசிரியைக்கும் மற்றும் என்னை ஊக்குவித்த அனைத்து அன்பர்கட்கும் எனது உளமார்ந்த மாபெரும் நன்றியை நவில்வதில் மகிழ்வெய்துகின்றேன்.

'கீதாஞ்சலி'
கிழைப்புலோலி,
புலோலி. 1990–03–10

அம்பாள் அடியான்
ஆ. நடராசா

உ
சிவமயம்



பருத்தித்துறை

தென்புலோலி சந்தாதோட்டத்தில்

முன்னாள் 'முதலித்தாய்' என வழங்கப்பெற்ற

**அன்னை மனோன்மணி அம்பிகை மீது**

அக்ஷய ஹூ தைத்திங்கள் 27-ம் நாள்

நிகழ்ந்த மகா கும்பாபிஷேகத்தின்

பொருட்டுப் பாடிய

# திருப் பொன்னூஞ்சற் பாடல்கள்

*********

விநாயகர் காப்பு (அறுசீர்விருத்தம்)

சந்திரப் பிறை கடுக்கைச் சடைமௌலிச் சங்கரன்தன்
மந்திரச் சொல்லி யாம் மனோன்மணிக் கூஞ்சல் பாட
தந்தியி னுருவங்கொண்ட தாமிர மேனி யாய்! என்
புந்தியின் சுடரே! காப்பாய்! பூங்கழல் போற்றினேனே.

# திருப் பொன்னூஞ்சற் பாடல்

சரஸிருக மலர்பூந் தடாகம் வங்கம்
சார்பருத்தித் துறை மருவு சந்தா தோட்டில்
வரமருள நமதுபழத் தொளியா யந்நாள்
வணங்கு பெரியார்முதலி மகிழெம் மாதா!
திரமுறுபல் கலைவளமு மிதர செல்வச்
செழிப்பு மெங்கட் கீந்தநின்தன் திவ்ய நாமம்
அரவணையான் சோதரியே! பாடுகின்றோம்
அம்பிகை மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 1

அத்தனருள் நான் மறைகள் கால்களாக
ஆதியறு சாஸ்திரங்கள் விட்டமாக
நத்தெழுநான் காகமங்கள் விட்டமாக
நவிலறுபான் நாற்கலைகள் வடமஃதாகத்
தத்துவந் தொண் ணூற்றாறும் பீடமாகச்
சரஸ்வதியு மிலக்ஷ்சுமியுந் தாவியாட்ட
உத்தரம்முன் னருள்செய் சந்தா தோட்டத்தின்
உண்மையுள் மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 2

திடமான சிந்தனையர் செழித்து வாழுஞ்
சீர்ப்பதி சந்தா தோட்டச் சிறப்பாளானாய்
கடமார்ந்த மணிக்கரங்க ளபிந யிக்கக்
கங்கையணின் நர்த்தகியாய்க் காட்சி தந்தாய்
குடமார்ந்த மஞ்சனம்பால் தயிர் நெய் சாந்து
குங்குமங்காப் பார்ந்து பன்னீர் குளிர ஆடிப்
புடமார்ந்த ஜொர்ணமெனச் ஜொலிக்குந் தாயே!
பூஜிதை! மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 3

சேனையுடன் திரண்டுவரு சிப்பாய் முன்னாள்
திணறினன்சந் தாதோட்டத் திருப்பதிக்கண்
ஆனையிவ ணுறுவாவிச் சேற்றி னுள்ளே
அமிழ்ந்தும் போ,துன்னையருச் சித்து மீட்டுத்

தேனையுறு மலர்கொண்டு சேவித்தே நின்
திருவருளை வியந்துய்ந்த செய்தி மெய்யாள்
ஊனையிற வெல்லும்பர் முதலித் தாயே!
ஒளிர்செய் மனோன்மணி பொன் னூஞ்ச லாடீர்!

வந்திப்போர்க் கருள்சுரக்கும் முதலி மாதா!
மாறாத பிணிக்குநீ மருந்தா மென்று
சிந்தித்தே நின்பதியில் குடியமர்ந்து
செல்வன்சந் திரன்சேவித் தார்நின் சீர்த்தாள்
நிந்தித்த நோயினின்று மவரை மீட்டுன்
நீடுபுக ழற்புதத்தை நிறுவி வைத்தாய்
உந்திப்பூம் பத்மநா பன்சோ தரீஇ
ஒப்பில் மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 5

தொந்தமுறு தவத்தினர்கள் வாழுஞ் சந்தா
தோட்டத்து லருட்கோயில் சுடர எங்கள்
நிந்தமுறு குலதெய்வ மானாய் தேவிஇ!
நேர்த்திகள் நெய் வேத்தியங்கள் நிலவ நின்றாய்!
பந்தமுறு பக்தரிங்கே பணியா லயம்
பரிமளிக்க வுனக்கீந்து பரவுகின்றோம்
அந்தமில்சீர் ஆனைப்பாகன் தோட்டப் பேர்
அற்புத மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 6

முத்துதிர்மென் னகையணங்கார் வடங்க ளீர்க்க;
மொய்குழலார் மங்கையர்கள் கவிகள் பாட;
வித்துவஞ்சேர் அந்தணர்கள் வேத மோத;
வேண்டுமடி யார்கள்குழாம் மெய்சி லிர்க்க;
உத்தமநோன் பிருந்தன்பர் கரங்கள் கூப்பி
''ஓம்சக்தி! சக்தி''யென ஒலி யெழுப்ப
அத்துவித மருள்கோயில் கொண்டாய் காளீஇ!
அம்மா மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 7

சாதகியே! எங்கள் பதி சந்தா தோட்டச்
சாரதையே! சிம்மவா கனமார் தாயே!
பாதகமெல் லாமொழித்தாள் பகவதிப் பேர்ப்
பத்தினியே! முதலியம்மா பதுமை யாளே!

சீதமதி செஞ்சுடர் நேர் இரண்டு நேத்ர
திவ்யவத னத்தணங்கே! சீர்கள் நல்கும்
ஆதர மகாதேவீஇ! எங் குலத்தின்
அலரீஇ! மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 8

கலைவளமும் திருவளமுஞ் செழிபண் பார்ந்தோர்
கண்கண்ட தெய்வ மெனக் கருத்திற் கொண்டு
சிலைவளஞ்சேர் திருப்பணிச்சீர் சிறக்க வீந்த
சிற்பக்கோயில் விளக்குஞ் சீர்த்தி யாளே!
நிலைபெறுகைங் கரியமுனக் கன்பர் சேர்ந்து
நின்திருப்பு கழ்க்கீத நிரைகள் பாட
அலைகடலார் சந்தா தோட்டத் தமர்ந் தாய்
அம்புஜ மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 9

அந்தரவிண் ணிந்திரர்துந் துபிமு ழக்க
ஆஞ்சனே யர்மகர வீணை மீட்க
சுந்தர ஸியாமளன் வேய்ங் குழலி சைக்க
சோபனநீ தஞ்சுரர்மங் கையர்கள் பாட
மந்திர ''சிவா யநமஓம்'' கற்றூர்ந்த
மறையவர்கள் முறைமுறையாய் வருஷித் தேத்த
சிந்துரனுந் தம்பியருங் களிகூர்ந் தாடச்
சிலையே! மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர் 10

பங்கய மலர்தாம முடி சற்றாட;
பாவனக்கை வளையல்கள் குலுங்கி யாட;
துங்கவிசை கேள் செவிக்குண் டலங்க ளாட;
சுரிகுழல் படர்ந்தாடச் சூல மாட
தங்கமணிப் பதக்கங்கள் கழுத்தி லாட
சந்திரஹா ரஞ்சரிகை மார்பிலாட
அங்கயலி ரண்டுவிழி அருளும்பிகா!
அமிழ்தே! மனோன்மணி மென்னூஞ்ச லாடீர்! 11

பட்டணிமின் னிடைமேக லேது லங்கப்,
பவளவிதழ் தொடு வயிரவப் பணியி லங்கப்
பொட்டணி நுதற் குங்குமம்வி ளங்கப்
பொன்னவிர்முத் திழைகொய்ச கந்த ழங்க
இட்டமுறு நாரணன் நான் முகனின் பெய்த
இமையவர் மலர்மழை பொழிந்தி றைஞ்ச
அட்டலக்ஷ்மி யானமுதல்லீஇ அந்தரீஇ
அமிழ்தே! மனோன்மணி பொன்னூஞ்ச லாடீர்! 12

## வாழி!

அறநெறி சொல் அந்தணர்கள் வாழி! வாழி!!
அம்பிகையை நம்பிவணங்கன்பர் வாழி
திறனுயர் சீர் ஆலயஞ் செய் சிற்பர் வாழி!
திருப்பணிக ளின்சபையார் சிறந்து வாழி!
கறவையினம் பால்பொங்க வாழி! வாழி!!
கற்பகச்சந் தாதோட்டம் களித்து வாழி!
மறமழித்து நீதிசெய்து புவனம் காப்பாள்
மனோன்மணி எங்,குலதெய்வ மாதா! வாழி!!

## லாலி!

பச்சை வர்ண மாலை மார்புப் பதுமைத் தேவி லாலி!
பர மேஸ்வரீஇ உமையாம் பகவதியே லாலி!
கச்சையிடை மேகலையாள் காளி யம்மா லாலி
கருணை மனோன் மணியே கற்பகமே லாலி!

ஆதிசக்தி அம்பிகையே! அபிராமி லாலி
அமரர் எத்தும் அந்தரியே அறவணங்கே லாலி!
நீதி பக்தி நெறி பயக்கும் நிரை சுரதே! லாலி!
நிலவொளீர் மனோன்மணியே நித்திலமே லாலி!

சப்பிரமஞ் சப்பவனிச் சங்கரியே லாலி!
சாற்றுதிரு வாசிலமர்த் தவிசினளே லாலி!
சுப்பிரபாதப் புகழோன் சோதரியே லாலி!
சூரியா! மனோன்மணியே! திரிசூலி லாலி!

## பராக்கு!

சூரியமா ணிக்க மெனச் ஜொலிப் போய் பராக்கு அலர்
சுகந்த கஞ்சப் புஷ்ப பாணி! சோபிதை! பராக்கு
வீரியவாளரி யிலமர் விமலே பராக்கு - சுரி
விரிகுழல்மீ தணிமுடியார் விறலீஇ பராக்கு
சீரிய சந்தாதோட்டம் திகழ்தாய் பராக்கு - கரும்புச்
சிலை சரம்வாள் தொடுகரங் கொள்தேவீஇ பராக்கு
மாரியென்னத் திருவருளை வழங்குவோய் பராக்கு - இசை
மருவுசந்தா தோட்டவாசி மனோன்மணி பராக்கு.

மின்னிவரு கனியுருவே! வித்தகி பராக்கு - தீர
வீரமகா காளியுமாம் விண்ணவள் பராக்கு
துன்னிவரு பக்தருள்ளச் சோதியாள் பராக்கு - நித்யம்
தூய பரிமளந்தரிக்கும் சுயம்பாள் பராக்கு
நன்னிலஞ்சந் தாதோட்ட நாயகி பராக்கு - பர
ஞானவருள் பொழியிருமை நயனியாள் பராக்கு
மன்னிசை விளங்கு தெய்வ மதுமதியாள் பராக்கு - உம்பர்
வானவரும் போற்றிசை மனோன்மணி பராக்கு.

## எச்சரிக்கை

பண்ணார் சிலம்பொலி செய்பாதாம் புஜஅந்தரீ இ!
விண்ணாள் மனோன்மணியே! மெய்ப்பொருளே! எச்சரிக்கை

இச்சை கிரியை ஞானம் ஏந்துகை மனோன்மணியே!
பிச்சி மலர்க் கூந்தற் பிஞ்ஞகியே எச்சரிக்கை!

போற்றுதல் செய்துய்ந்தோம் நின்பொற்கழலிற் தஞ்ச
முற்றோம்
மாற்றுயர்ந்த காஞ்சனையே! மனோன்மணியே எச்சரிக்கை!

நீயே கலைக்க ணெங்கள் நெஞ்சகமும் உன்கோயில்
தாயே மனோன்மணி ஓம்சக்தி ஓம் எச்சரிக்கை!

## மங்களம் !

சொல்வாழ் பதிசாந்தா தோட்டம் மகிழ வதி
சோபித சௌந்தரிக்கு சுபமங்களம்
வில்வாள் பங்கஜம் ஆழி தண்டந்திரி
வேல்சங்கு தாரிக்கு விறன் மங்களம்
நல்வாழ் வெமக்குநல்கு சந்தன குங்கும
நாயகி அந்தரிக்கு நன்மங்களம்
மல்வாழ் எண்புஜ மாதர் செந்தாது வண்ண
மனோன்மணி தேவிக்கு மன்மங்களம்!

சிங்கத்தில் வீற்றிருந்து ஜெகமனைத்தும் புரப்பவள்மேல்
திரிசூல பாணினிக்கு ஜெயமங்களம்
தங்கப்பட்டாடை தரி தளிருடலாள் சாந்திதவழ்
தரள நகைச் சாமளைக்குத் தனிமங்களம்
வங்கச் சிந்தெனப்பரந்து வந்திக்குஞ் சந்தாதோட்ட
வாசிகளின் மதுமதிக்கு மகிழ்மங்களம்
துங்கக் கண்ணுயிரத்தாள் தொல்சிறப்பின் பத்தினியாள்
சுரபதி மனோன்மணிக்குச் சுபமங்களம்.

பூரணம்.

11—10—1978ல் அம்பாள் முன்றலில் நடை பெற்ற வாணிவிழாவில் 7வயதுப் பிஞ்சுக்குழந்தை ஆற்றிய பேருரை.

பெரியோர்களே! அன்பர்களே! வணக்கம்

# எங்கள் ஆச்சி

எங்கள் ஊர் புலோலி. அங்கே எத்தனையோ ஆச்சிகள் இருக்கிறார்கள். ஆச்சிகளுள் சிறந்த ஆச்சி யார் தெரியுமா? முதலி ஆச்சி.

அவள் எங்கிருக்கிறாள்? எப்படி இருப்பாள்? என்ன செய்வாள்?

முதலி ஆச்சி எங்களோடேயே இருக்கிறாள். சிலையாய் இருக்கிறாள். ஆனால், கண்மூடாமல் எங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள்.

இந்த ஆச்சி என்னதான் செய்திருக்கிறாள்?

தீர்க்க முடியாத வியாதிகளைத் தீர்த்து வைத்தாள். ''ஆச்சி'' என்று கூவி அழைப்பவர்க்கு அபயம் கொடுப் பாள்.

எங்கள் ஆச்சி பொல்லாதவவும் கூட, பிழைசெய்தால் தண்டனையும் கொடுப்பா.

நாங்கள் பொய் சொல்லக் கூடாது. களவு எடுக்கக் கூடாது. ஒற்றுமையாய் வாழவேண்டும். நல்ல ஒழுக்கமுள் ளவர்களாய் இருக்க வேண்டும். அன்பாய் பேசவேண்டும். ஆசிரியர் சொற்கேட்டு நடக்க வேண்டும்.

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாம் எங்கள் ஆச்சியை நாம் பூசித்து வணங்குவோமென்றால் எங்களுக்கு இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை.

வணக்கம்.

உரையாற்றியவர்:
**செல்வி ந. சிவாந்தினி**

# தென்புலோலி ஸ்ரீமனோன்மணி அம்பாள்

## திருப்பஞ்சகம்

திங்களணி செஞ்சடை அரன்வாம பாகிநீ
திரிசூலி சண்டி காநீ
சிந்தூர திலகிநீ செந்தாது வடிவுநீ
திருமாலின் தங்கை யாள்நீ
தங்கமொளிர் சுந்தரி சவுந்தரி நிரந்தரீஇ
சரோருகத் தாம முடியாள்
சரம்கன்னல் வில்லுவேல் பாசாங்கு ஸம்சங்கு
சக்கரம் வாள்தா ரிநீ
பங்கமணு காமலுன் பக்தருக் கினியஅருள்
பாலிக்கும் பதுமை யாள்நீ
பாலாபி ஷேகமும் கோலாக லச்சீர்கள்
பரவருச் சனைபூ சையும்
மங்கல ஒளித்தீப ஆவலிநை வேத்யமும்
வாஞ்சையுட னேற்று மகிழ்வோய்!
மருமலர்த் தென்புலோ லிச்சந்தா தோட்டமமர்
மனோன்மணித் தாயும் நீயே.

மறைபுகலு முண்மைவாழ் ஓங்கார காயத்தரி
மந்திரத்(து) உட்பொ ருள்நீ
மாயாவி சாரங்கள் பில்லிபகை சூனியம்
மடியச்செய் வாக்கி னள்நீ
கறையினுறை விடமான கயவரை ஒழித்தெற்று
காளிமக மாரி யும்நீ
கற்பகத் தாருவென உனைநம்பி னோர்க்கின்னல்
களைந்தருள் கபாலி யும்நீ
பொறையினிரு தயர்களை வஞ்சனையி னல்வாட்டு
பூரியர்கள் போக்கை யுள்ளம்
பொறுக்காம லன்னார்க்கு விரைவிலே தண்டனை
புரிந்துஇரட் சிப்ப வளும்நீ

மறைவிலதி புதுமைகள் மல்குஆங் காரிநீ
மாசுங்க ஆச னியும்நீ
வண்மையுறு தென்புலோ லிச்சந்தா தோட்டமமர்
மனோன்மணித் தாயும் நீயே.

பாரிலுனை நாள்தொறும் பரவுவோர்க்(கு) இனியஅருள்
பாலிக்கும் பரமேஸ் வரீஇ
பதினன்கு லோகமும் போற்றுபத் திரகாளி
பாதவிரல் மோதி ரத்தாள்
சீரிய இணைத்தாள்கள் அணிகொலிசு தண்டையொலி
செய்நடன சிங்கா ரிநீ
செம்பவள வாயின்மேல் திகழ்வயிர மூக்குத்தி
சேர்புலாக்(கு) அணி சிறப்பாள்
வீரியதின் மார்பினில் முன்னுநவ ரத்னமிழை
மெருகுத்தங் கப்ப தக்கம்
மிளிரழகி சிற்றிடையின் மேகலையும் கைகளில்
விதிர்த் தொளிரு வளையல்காறி
மாரியென என்தனிரு கண்ணீர் வழிந்தோட
மண்டியிடு கின்றேன் மாதா
மாதரார் தென்புலோ லிச்சந்தா தோட்டமரர்
மனோன்மணித் தாயும் நீயே.

எண்டிசையு மதிரொலிசெய் சங்கநா தம்மணிகள்
இசைக்கின்ற எழுச்சி யூடாங்(கு)
இரவிசந் திரர்களென இணைகருணை விழிமலரு
ஈசுவரி ஏகாட் சரீஇ
அண்டியுறை தமர்களின் நம்பிக்கைத் துரோகிகளை
ஆய்ந்துநீ அவர்க ளுக்காங்(கு)
அரியதண் டந்தரும் ஆங்காரி சூரியே!
அடியேன்நெஞ் சர்ப்ப ணித்தேன்
தண்டிகை அலங்கார சப்ரமஞ் சச்சயனி
ஜகத் ஜனனி சுகபாணினீஇ!
சர்வமும் நீயேயுன் பாதத்தி லென்சிரம்
தாழ்த்தியுன் சகல நாமம்

மண்டியுட னன்பினால் பன்முறைகள் ஓதினேன்
மதித்தெனது துயரை மாற்று
மன்னுபதி தென்புலோ லிச்சந்தா தோட்டமமர்
மனோன்மணித் தாயும் நீயே.

பண்டுதனி லுன்வதிகை அற்புதம் பற்றியான்
பாடவருள் பாலித் தாய்நீ
பக்தியொடு நின்சரிதை பகர்தொண்டு செவ்வனே
பண்ணுசெயற் பாவை யும்நீ
விண்டுதின முன்நாம மேன்மையின் சீர்பரவி
மெய்சிலிர்த் தோத வைத்தாய்
மேதினியி லுன்தலம் எவ்வெவரும் நாடிவர
வேண்டினேன் விமலை யாளே!
குண்டல மிலங்குநின் காதுகளி னேற்றென்தன்
முறைகள்தவிர் குங்கு மத்தாய்
கோரமகு டாசுரனை ஹதஞ்செய் துரந்தரீஇ
கோமளாங் கீஇகுலக் கார்
வண்டுமலர் மீதுபண் முரல்சோலை ஆலைகள்
மதிகல்விச் சாலை மருவ
வங்கமெறி தென்புலோ லிச்சந்தா தோட்டமமர்
மனோன்மணித் தாயும் நீயே!

— கவிக்குயில் சிவா

## சக்தி பாடல்கள்

### ஜெய ஆதிபராசக்திக்கு ஜேய்!

தில்லை ஆட்டக்காரி நீ செய்யடி ஓர் மாயம்
எல்லையற்ற இன்பம் இங்கு யாவருக்கும் வேண்டும்
கல்லை ஒத்த மனமே உருகி கானம் பொழியவேண்டும்
இல்லை என்ற சொல்லே இங்கு இல்லையாக வேண்டும்
சொல்லை இனிமை ஆக்கி வாழ்வை தூய கீதமாக்கி
அல்லை பகலை நினையா நெஞ்சம் அமுத மயமே ஆக்கு
வில்லை விடத்தை அஞ்சா உணர்வில் வீரசாந்தம் ஊட்டு
முல்லை கமலம் போலே உனக்கு முழுதும் உரிமையாக்கு
வல்ல மனிதத்தன்மை ஐந்தும் வாய்த்திடல் வேண்டுமடி
தில்லை ஆட்டக்காரி நீ செய்யடி ஓர்மாயம்.

அம்மா அம்மா அம்மா
அம்மா அம்மா அம்மா
இம்மா நிலத்தில் எல்லாம்
இயங்குதடி யுன் ஆடலினல் ஓ — அம்மா
(பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்)

கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ் சம்
பந்தனும் பாலுண்ட கும்ப
தனத்தாளே அறம்வளர்த்த கரத்தாளே
திரிபுரங்கள் தழலாய் வேவச்
சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை
பொறுத்திரக்கஞ் செய்யும் செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே
என்தலைமேல் வைத்தாள் வாயே.
(தேவி தோத்திரத் திரட்டிலிருந்து)

நாயகி நான்முகி நாராயணி நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரணம் அரண் நமக்கே.

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லவெல்லாந் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழாள் அபிராமி கடைக் கண்களே.

(அபிராமி அந்தாதி)

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி திரியம்பகி எழிற்
புங்கவி விளங்கு சிவசங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணிமனாதீத நாயகிகுணாதீத
நாதாந்த சக்தியென்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணியெனப் புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராசனுக் கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(தாயுமானவர் பாடல்)

ஓம் சக்தி! சக்தி ஓம்!

⊙⊙⊙

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருத்தாண்டகம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறவுருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறித் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீஇ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழறி உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசமயங்கள் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதகமனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் இருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செருத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கர முற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கான முத்தே
கதிர்காம முற்றார் பெருமாளே.

## வாழ்த்துப் புராணம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

அபிராம் அச்சகம் - அல்வாய்